# நிதியியல் உளவறிதல் பிரிவு

# பயன்பெறும் சொந்தக்காரர் தொடர்பில் வழங்கப்படும் தகவல்கள்

தங்களின் கம்பனி (சட்ட ஆளொருவர்) பின்வரும் நிதியியல் நிறுவனங்களுடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது:

அ) உரிமம்பெற்ற வங்கிகள்/ உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்

ஆ) உரிமம்பெற்ற பங்குத்தரகர்கள்

இ) உரிமம்பெற்ற காப்புறுதிக் கம்பனிகள்

ஈ) பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவைகளை வழங்குவோர் (உதாரணமாகத் செல்லிடத் தொலைபேசி பணத் தொழிற்பாட்டாளர்கள், பணம் அனுப்புவோர்),

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளின்படி, தங்கள் கம்பனியின் “பயன்பெறும் சொந்தக்காரர்” பற்றிய பின்வரும் குறித்துரைக்கப்பட்ட தகவல்களை நிதியியல் நிறுவனத்திற்கு வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அ) முழுப்பெயர்

ஆ) அலுவல்சார் தனிப்பட்ட அடையாளம் அல்லது வேறேதேனும் அடையாள இலக்கம்

இ) நிரந்தர/ வதிவிட முகவரி

ஈ) சொத்துரிமையின் சதவீதம்

“பயன்பெறு சொந்தக்காரர்” என்பது இறுதியாகச் சொந்தமாக வைத்திருக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற [மூலதனத்தில் பத்து (10) சதவீதத்திற்கும் கூடுதலான பங்கைச் சொந்தமாகக் கொண்டுள்ள] அல்லது சட்ட ஆள் தொடர்பில் இறுதியான கட்டுப்பாடுகளைப் புரிகின்ற ஆள் உட்பட, எந்த ஆளின் சார்பில் கொடுக்கல்வாங்கலொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதோ அந்த ஆள் எனப் பொருள்படும். பயன்பெறு சொத்துரிமை உடமைகளில் அநேக வடிவங்கள் காணப்படுகின்றன.




* பயன்பெறும் சொத்துரிமையின் எளிமையான உதாரணம்

AB லிமிடெட்டின் சொத்துரிமை அமைப்பு

**தங்கள் கம்பனி பற்றிய மற்றைய தகவல்களுக்கு மேலதிகமாக, பயன்பெறும் சொந்தக்காரர்கள் தொடர்பான இத்தகவல்களை நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்குமாறு தாங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.**

நிதியியல் நிறுவனங்களினால் அவர்களது வாடிக்கையாளர் மற்றும் பயன்பெறும் சொந்தக்காரர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு நடைமுறையாகும். எனவே, தங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் வரவேற்கப்படுகின்றன.


மேலதிகத் தகவல்களுக்கு தயவுசெய்து பின்வருவோரைத் தொடர்பு கொள்ளவும்:
உங்களின் நிதியியல் நிறுவனம் அல்லது
பணிப்பாளர், இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு
இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
011-2477509 011-2477692 fiu@cbsl.lk www.fiusrilanka.gov.lk